டிஜிட்டல் டெய்லி

அக்ரி-டாக்டர்

agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 16.09.2026 புதன்கிழமை | பக்கங்கள் 25 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 074- Madurai | Online Edition

# கிராமப்புற மக்களின் வாழ்க்கையை மாற்றியமைக்கும் தென்னை நார் தொழில்



புது தில்லி, செப்.15

தென்னை மட்டையிலிருந்து தொடங்கும் தேங்காய் நார், இந்தியாவின் தென்னை விளையும் பகுதிகளில் வாழ்வாதாரத்திற்கான ஒரு ஆதாரமாக மாறி வருகிறது. இயற்கையான, நீடித்து உழைக்கக்கூடிய, சுற்றுச் சூழலுக்கு உகந்த நார் வகையான தேங்காய் நார், பல தலை முறைகளாகவே இந்தியாவின் கிராமப்புறப் பொருளாதாரத்தின் ஒரு அங்கமாக இருந்து வருகிறது. இப்போது, தொழில் முனைவோர் அதை பாய்கள், கயிறுகள் முதல் கைவினைப் பொருட்கள், உயிரி உரங்கள், புதுமையான பேக்கேஜிங் தீர்வுகள் வரையில் பல வகையான மதிப்பு கூட்டப்பட்ட பொருட் களாக அதிகளவில் மாற்றி வருகின்றனர். இந்த மாற்றத்தின் பின்னணியில், ஒரு பாரம்பரியச் செயல்பாட்டை நவீன வாழ் வாதாரமாக மாற்றும் ஆயிரக்கணக்கான கிராமப்புற தொழில் முனைவோரும் கைவினைஞர்களும் உள்ளனர்.

மத்திய குறு, சிறு, நடுத்தர நிறுவனங்கள் அமைச்சகத்தின் ஆதரவுடன், தென்னை நார் வாரியமானது, பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கத் திட்டத்தின் மூலம் இதை உள்ளூர் பொருளாதார வளர்ச்சிக்கான ஒரு பாதையாக மாற்றி வருகிறது.

ஆந்திரப் பிரதேசத்தின் கிழக்கு கோதாவரி மாவட்டம், கடியத்தில், செல்வி அல்லம் கௌதமி தென்னை நார் கழிவு களைக் கொண்டு தொழில் செய்யும் ஒரு வெற்றிகரமான நிறுவனத்தை தொடங்கினார்.

அவர் தவாலேஸ்வரத்தில் உள்ள தென்னை நார் வாரிய பயிற்சி மையத்தில் சிறப்புப் பயிற்சி பெற்று, ரூ.6.50 லட்சம் வங்கிக் கடன் உதவியுடன், ரூ.10 லட்சம் திட்டச் செலவில் 2024-25-ம் ஆண்டில் அடிகோ காயர் ப்ராடக்ட்ஸ் என்ற நிறுவனத்தை நிறுவினார். இந்த நிறுவனம் தற்போது சுற்றுச்சூழலுக்கு உகந்த கால்மிதி விரிப்புகள், கயிறுகள், அலங்காரப் பொம்மைகள், கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்கிறது.

இந்த நிறுவனம் ஆண்டுக்குச் சுமார் ரூ.35 லட்சம் வருவாயையும், ஏறத்தாழ ரூ.10 லட்சம் லாபத்தையும் ஈட்டியுள்ளதுடன், ஆறு பெண்களுக்கு நேரடி வேலை வாய்ப்பையும் உருவாக்கியுள்ளது. இதன் தாக்கம் அவரது சொந்த நிறுவனத்தையும் தாண்டி விரிந்துள்ளது. அவர் சுமார் 120 பெண்களுக்குத் தென்னை நார் பாய் நெசவு, கயிறு தயாரித்தல், கைவினைப் பொருட்கள் உற்பத்தி ஆகியவற்றில் பயிற்சி அளித்து, அவர்கள் வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்க உதவியுள்ளார்.

இதேபோல் கேரள மாநிலம் கோழிக்கோடு பகுதியைச் சேர்ந்த பி.சுரேந்திரன், கோழிக்கோட்டில் சம்பூர்ணா பிளஸ் அக்ரோ ஃபெர்டிலைசர் எண்டர்பிரைசஸ் நிறுவனத்தை நிறுவினார். கண்ணூர் தென்னை நார் வாரியம், கலவூரில் உள்ள மத்திய தென்னை நார் ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றின் பயிற்சியுடனும் தொழில்நுட்ப ஆதரவுடனும் தென்னை நார் கழிவு உயிர் உரத்தை அவர் உற்பத்தி செய்யத் தொடங்கினார். வெறும் ஓராண்டில் அவரது நிறுவனம் 500-க்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களைக் கொண்டு உள்ளது. 20 டன்களுக்கும் அதிகமான உயிர் உரத்தை விற்பனை செய்து 2024-25-ம் நிதியாண்டில் ரூ.13 லட்சம் வருவாயையும் ரூ.4 லட்சம் லாபத்தையும் அந்த நிறுவனம் ஈட்டியுள்ளது.

தென்னை நார் இந்தியாவின் மிகப் பழமையான இயற்கை நார்களில் ஒன்றாகும். இந்தியாவில் ஒழுங்கமைக்கப்பட்ட தென்னை நார் உற்பத்தி, 1859-ம் ஆண்டு கேரளாவின் ஆலப்புழாவில் முதல் தென்னை நார் தொழிற்சாலை நிறுவப்பட்டதன் மூலம் தொடங்கியது. அன்று முதல், இத்துறை தென்னை உற்பத்திப் பகுதிகளில் வளர்ந்துள்ளது. இந்தியா உலகின் மிகப்பெரிய தென்னை நார் உற்பத்தியாளராக உள்ளதுடன், உலகளாவிய தென்னை நார் உற்பத்தியில் 80 சதவீதத்திற்கும் அதிகமான பங்களிப்பைக் கொண்டுள்ளது. திறன்கள், நிதி, தொழில்நுட்பம், ஆராய்ச்சி, சந்தை ஆதரவுடன், இந்தியாவின் பாரம்பரிய கயிறுத் துறை, உள்ளூரில் கிடைக்கும் வளங்களை, தொழில்முனைவுக்கான வாய்ப்புகளாக மாற்றி சீராக முன்னேறி வருகிறது.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# மைக்ரோகிரீன்ஸ் (நுண்கீரைகள்) குறித்த ஒரு நாள் பயிற்சி

திருச்சி, செப்.15

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் பல்வேறு பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக வருகின்ற 17.09.26 அன்று (வியாழக்கிழமை) மைக்ரோகிரீன்ஸ் (நுண்கீரைகள்) குறித்த ஒரு நாள் கட்டணப் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இப்பயிற்சியில் மைக்ரோகிரீன்ஸ் வளர்ப்பு, நுண்கீரைகளின் முக்கியத்துவம், நுண்கீரை வகைகள், நீர் மற்றும் ஒளி மேலாண்மை, அறுவடை மற்றும் சந்தைப்படுத்துதல் போன்றவை எடுத்துரைக்கப்படும். இதன் மூலம் சிறிய இடத்தில் ஊட்டச்சத்துமிக்க கீரைகளை உற்பத்தி செய்வது குறித்து செயல்முறையோடு விளக்கப்படும்.

பயிற்சியில் கலந்து கொள்ள விழைவோர் பயிற்சி நாளன்று காலை 9 மணிக்கு வந்து பயிற்சி கட்டணம் ரூ.590/- நேரிடையாக செலுத்த வேண்டும். முன் பதிவு அவசியம். பயிற்சியானது காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறும். தேநீர் மற்றும் மதிய உணவு வழங்கப்படும். பயிற்சியின் இறுதியில் சான்றிதழ் வழங்கப்படும்.

எனவே ஆர்வமுள்ள விவசாயிகள், மகளிர் மற்றும் இளைஞர்கள் முன்பதிவு செய்து கலந்து கொண்டு பயனடையுமாறு கேட்டுக் கொள்கிறோம். மேலும் விபரங்களுக்கு தொலைபேசி எண் : 0431-2962854, 90421 21672, 85088 35287, 99443 98239 என்ற எண்களை அலுவலக நேரத்தில் (காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை) தொடர்பு கொள்ளலாம்.

மேற்கண்ட தகவலை சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ந.புனிதவதி தெரிவித்தார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அ அக்ரி-டாக்டர் agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

## வகை வகையான சூப் தொடர்...

# சூப் செய்வது எப்படி?

**39. எலுமிச்சை கொத்தமல்லி சூப்**

**தேவையான பொருட்கள்**

கொத்தமல்லி — ½ கப்

எலுமிச்சை சாறு — 1 டேபிள்ஸ்பூன்

மிளகு தூள் — ½ டீஸ்பூன்

உப்பு — தேவையான அளவு

**செய்முறை**

தண்ணீரில் கொத்தமல்லியை கொதிக்கவைத்து இறுதியில் எலுமிச்சை சாறு சேர்த்து பரிமாறவும்.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

**நாளை தொடரும்...**



# மாவட்ட அளவிலான விவசாயிகளுடன் வேளாண் விஞ்ஞானிகள் கலந்துரையாடல் நிகழ்வு

புதுக்கோட்டை, செப்.15

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் வட்டாரத்தில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை வாயிலாக செயல்படுத்தப்படும் மாநில விரிவாக்க திட்டங்களின் உறு துணை சீரமைப்புத் திட்டத்தின் கீழ்-2026-27 ஆம் ஆண்டுக் கான மாவட்ட அளவிலான விவசாயிகளுடன் வேளாண் விஞ்ஞானிகள் கலந்துரையாடல் என்ற நிகழ்ச்சி ஒருங் கிணைந்த வேளாண்மை விரிவாக்கம் மையம் ஆவுடையார் கோவிலில் நடைபெற்றது.




இந்நிகழ்ச்சிக்கு ஆவுடையார் கோவில் வேளாண்மை உதவி இயக்குனர் (பொறுப்பு) சி சவிதா தலைமையில் நடைபெற்றது. இந்த கலந்துரையாடல் நிகழ்ச்சிக்கு எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி மற்றும் அறக்கட்டளையிலிருந்து வருகை புரிந்த வேளாண் விஞ்ஞானி டாக்டர் மணிகண்டன் கலந்து கொண்டு தற்போது விவசாயிகளுக்கு ஏற்படும் பல்வேறுபட்ட இடர்பாடுகள் மற்றும் பிரச்சனைகள் பற்றி கலந்துரையாடல் நிகழ்ச்சி நடத்தினார்.

தற்பொழுது நிலவும் தட்பவெப்ப நிலைகள் அதிக வெயில் தாக்கத்தால் மரங்கள் செடிகள் அதிகளவு ஒளிச்சேர்க்கை நடத்த வேண்டியுள்ளதால் இதற்கு அதிகமான தண்ணீர் தேவைப்படும்.

தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டால் இலைகள், செடிகள் கருகிவிடும் என்பதனை எடுத்துக் கூறினார். மண் வளத்தை மேம்படுத்துவதற்கான இயற்கை சார்ந்த உரங்கள் மற்றும் மருந்துகள், கோடை உழவு செய்வதின் நன்மைகள், தற்பொழுது நெல் சம்பா பருவத்திற்கு ஏற்ற ரகங்கள், விதை நேர்த்தி செய்வதின் அவசியம் அதன் நன்மைகள், களை மேலாண்மை, சமச்சீர் உரமிடுதல் மற்றும் பூச்சி நோய்கள் கட்டுப்படுத்தும் முறைகள் பற்றி விவசாயிகளிடம் கலந்துரையாடல் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் விவசாயிகள் பயிர்களுக்கு ஏற்படும் பிரச்சனைகள் பற்றி கூறி விளக்கம் பெற்றனர்.

வேளாண்மை உதவி இயக்குனர் கலந்து கொண்டு வேளாண்மை துறை மூலம் தற்போது செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் பற்றி மற்றும் வேளாண் கிடங்கில் உள்ள இருப்புகள் பற்றிய தகவல்களை விவசாயி களுக்கு விளக்கமாக எடுத்து கூறினார்.

துணை வேளாண்மை அலுவலர் ரவிச்சந்திரன் உயிர் உரங்கள் பயன்படுத்தும் முறைகள் அதன் நன்மைகள் பற்றியும் நெல்லில் தழைச்சத்து குறைத்து இடுவதால் ஏற்படும் நன்மைகள் பற்றியும் விவசாயி களுக்கு எடுத்துக் கூறினார். உதவி விதை அலுவலர் ஞானராஜ ராஜன் கலந்து கொண்டு விதை உற்பத்தி தொழில்நுட்பம் மற்றும் விதை பண்ணை அமைத்து எவ்வாறு லாபம் அடையலாம் என்பதை விளக்கமாக எடுத்துக் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் ஆவுடையார்கோவில் வட்டாரத்தில் இருந்து பல்வேறுபட்ட கிராமங்களிலிருந்து 25 விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

இந்நிகழ்ச்சி ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் ஜகுபர் அலி மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் கீர்த்திகா ஆகியோர்கள் செய்திருந்தனர்.



Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# காலநிலை மாற்றத்தை வெல்லும் நெல் சாகுபடிக்கான புதிய பாதை

கோயம்புத்தூர், செப்.15

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் (TNAU), கோயம் புத்தூர் மற்றும் சிங்கப்பூரைச் சேர்ந்த TEMASEK உயிர் அறிவியல் ஆய்வகம் (TLL) ஆகியவை இணைந்து, திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், பருத்திக்கோட்டை கிராமத்தில் காலநிலை மாற்றத்திற்கேற்ற நெல் சாகுபடிக்கான வயல் விழா மற்றும் விவசாயிகள் விஞ்ஞானிகள் கலந்துரையாடல் கூட்டம் 15.09.26 அன்று நடைபெற்றது.




பருத்திக்கோட்டை கிராமத்தில் சுமார் 250 ஏக்கர் (100 ஹெக்டேர்) பரப்பளவில், தாளடி (ஈரப்பருவம்) மற்றும் கோடை (வறண்ட பருவம்) என இரண்டு பருவங்களில் மேற்கொள்ளப் பட்ட பசுமை இல்ல வாயுக்களின் உமிழ்வைக் குறைப்பதற்கான கள ஆய்வுகளின் முடிவுகளை விவசாயிகளிடம் எடுத்துரைக்கும் வகையில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

நெல் சாகுபடியில் காலநிலை மாற்றத்தின் தாக்கத்தைக் குறைத்து, உற்பத்தித்திறன் மற்றும் விவசாயிகளின் வருமானத்தை மேம்படுத்தும் நோக்கில், பாய்ச்சலும் காய்ச்சலும் நீர் பாசன முறை (Alternate Wetting and Drying – AWD), தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்மற்றும் வீஸிஸி பரிந்துரைக்கும் TLL உரக்கலவை, பருவத்திற்கேற்ற நெல் இரகங்கள் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்

கழகம் – மீத்தேனைப் பயன்படுத்தும் நுண்ணுயிரிக் கலவை (Methanotrophic Consortium) ஆகிய ஒருங்கிணைந்த தொழில் நுட்பங்கள் இக்களப் பரிசோதனையில் பரிசோதிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக விஞ்ஞானிகள், TEMASEK உயிர் அறிவியல் ஆய்வகப் பிரதிநிதிகள், வேளாண்மைத் துறை அலுவலர்கள், விவசாயிகள் மற்றும் பல்வேறு பங்குதாரர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இயற்கை வள மேலாண்மை இயக்குநரகத்தின் இயக்குநர் முனைவர் எஸ்.கார்த்திகேயன் தொடங்கி வைத்தார். வரவேற் புரையை நம்மாழ்வார் இயற்கை வேளாண்மை ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியரும் தலைவருமான முனைவர் பி.முரளி அர்த்தனாரி வழங்கினார். திட்டத்தின் முக்கிய செயல்பாடுகள் மற்றும் முன்னேற்றங்கள் குறித்து முனைவர் வீ.தவமணி, பேராசிரியர் விளக்கினார். திட்டத்தின் முக்கிய ஆய்வு முடிவுகள் குறித்து பேராசிரியர், முனைவர் எ.பரமேஸ்வரி, எடுத்துரைத்தார். விவசாயிகளுக்கான எதிர்கால செயல்திட்டங்கள்குறித்து இணைப் பேராசிரியர், முனைவர் பெ. கலைச்செல்வி, உரையாற்றினார்.

இத்திட்டத்திற்கு நிதியுதவி மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு வழங்கிய சிங்கப்பூரின் TEMASEK Life Sciences Laboratory–யைச் சேர்ந்த முனைவர் சீனிவாசன் ராமச்சந்திரன், முனைவர் கின்ஸ்வர்கீஸ் மற்றும் முனைவர் கோ புவே யீ ஆகியோர் கலந்து கொண்டு, நீரை சிக்கனமாகவும் முறையாகவும் பயன் படுத்துதல், மேம்படுத்தப்பட்ட TLL உர மேலாண்மை, பருவத் திற்கு ஏற்ற நெல் ரகங்களைத் தேர்வு செய்தல் மற்றும் மீத்தேனைப் பயன்படுத்தும் நுண்ணுயிரிக் கலவையைப் பயன் படுத்துதல் குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளித்தனர்.

மேலும், திருவாரூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ஜி.வித்யா, சிறப்புரையாற்றினார். தொடர்ந்து, முனைவர் பொ.ஜானகி, மண்வள மேலாண்மை குறித்து உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் வேளாண் அறிவியல் நிலையம் (KVK), நீடாமங்கலம் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் வி.தனுஷ் கோடி, கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இக்கூட்டத்தில் கள ஆய்வின் குறிப்பிடத்தக்க முடிவுகள் எடுத்துரைக்கப்பட்டன. இரண்டு சாகுபடி பருவங்களில், 100 ஹெக்டேர் பரப்பளவில் 369.4 டன் $CO_2$ சமமான பசுமை

ஹெக்டேர் பரப்பளவில் 369.4 டன் $CO_2$ சமமான பசுமை இல்ல வாயுக்களின் உமிழ்வு குறைக்கப்பட்டதுடன், வழக்கமான விவசாயிகள் கடைப்பிடிக்கும் சாகுபடி முறையுடன் ஒப்பிடும் போது நெல் மகசூல் 20 சதவீதம் அதிகரித்துள்ளது.

பாய்ச்சலும் காய்ச்சலும் நீர்ப்பாசன முறை + TLL உரக் கலவை + மீத்தேனைப் பயன்படுத்தும் நுண்ணுயிரிக் கலவை + பருவத்திற்கேற்ற நெல் ரகங்கள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து பயன்படுத்தும் தொழில்நுட்பம், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் நெல் சாகுபடிக்கு சிறந்த அணுகுமுறையாக இவ்வாய்வில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒருங்கிணைந்த தொழில்நுட்பம், ஒருபுறம் நெல் உற்பத்தி மற்றும் விவசாயிகளின் லாபத்தை அதிகரிப்பதுடன், மறுபுறம் பசுமை இல்லவாயுக்களின் உமிழ்வைக் குறைப்பதன் மூலம் உலக வெப்பமயமாதல் மற்றும் காலநிலை மாற்றத்திலும் பங்களிக்கிறது. இதன் மூலம் நிலையான நெல் உற்பத்திக்கு இது சிறந்த வழிமுறையாக அமையும் என தெரிவிக்கப்பட்டது.

நிகழ்ச்சிக்கு தலைமை உரையை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக இயற்கை வள மேலாண்மை இயக்குநரகத்தின் இயக்குநர் முனைவர் எஸ். கார்த்திகேயன் வழங்கினார். கள ஆய்வில் பங்கேற்ற விவசாயிகள் தங்களது அனுபவங் களையும் கருத்துகளையும் பகிர்ந்து கொண்டதுடன், இத்திட்டத்தின் மூலம் பயிர் மகசூல், விவசாயிகளின் பொரு ளாதார வருவாய் மற்றும் நிலையான வேளாண்மை நடைமுறை களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை எடுத்துரைத்தனர். நன்றியுரையை சுற்றுச்சூழல் அறிவியல் துறையின் இணைப் பேராசிரியர் முனைவர் செ.பவுல் செபாஸ்டியன் வழங்கினார்.

காவிரி டெல்டா பகுதியில் காலநிலை மாற்றத்திற்கேற்ற நெல் சாகுபடி முறைகள் மூலம் ஒரே நேரத்தில்உற்பத்தியை அதிகரிக் கவும், விவசாயிகளின் பொருளாதார வருவாயை மேம் படுத்தவும், பசுமை இல்லவாயுக்களின் உமிழ்வைக் குறைக் கவும் முடியும் என்பது இக்களநாள் மூலம் தெளிவுபடுத்தப்பட்டது. இது நிலையான வேளாண்மைக்கான நம்பிக்கைக்குரிய ஒரு புதிய பாதையாக அமையும்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# மிகக் கடுமையான வெப்ப ஆண்டாக 2027 இருக்குமென முன்னெச்சரிக்கை விடுக்கும் ஐரோப்பியா காலநிலை மையம்

ஐரோப்பிய காலநிலை மையம் வெளியிட்டுள்ள தகவலின்படி, உலகளவில் பதிவு செய்யப்பட்ட வரலாற்றிலேயே மிகக் கடுமையான வெப்ப நிலவிய மாதமாக கடந்த ஆகஸ்ட் 26 பதிவாகியுள்ளது.




மேலும் வலுவடையந்து வரும் எல்-நினோ காரணிகளால் வரவிருக்கும் நாட்களில் நிலவரம் இன்னும் மோசமடையக் கூடும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளன.

**வெப்பநிலை அதிகரிப்பு?**

நிலம் மற்றும் கடல் பரப்பளவில் உலகளாவிய வெப்பம் நிலவியதன் உச்ச கட்டமாக மேற்கு ஐரோப்பியா மற்றும் அமெரிக்காவில் கடுமையான வெப்ப அலைகளும் காட்டுத்தீயும் ஏற்பட்டன.

கோபர் நீக்கஸ் காலநிலை மாற்றம் சேவை மையத்தின் தரவுகளின்படி, கடந்த ஆகஸ்ட் மாதத்தின் சாரசரி உலகளாவிய காற்று வெப்ப நிலை 62 டிகிரியாக இருந்தது இது இதற்கு முன் ஜூலை 2023யில் பதிவான சாரசரியை விட 30டிகிரி அதிகமாகும்.

கோபர் நீக்கஸ் மையத்தின் தரவுகளின்படி, 1940 ஆண்டு முதல் நிலவும் பதிவுகளைக் கொண்டு உற்று நோக்கும் போது, மனித குலம் இதுவரையில், கண்டிறதா மிக மிக அதிக வெப்பத்தை தற்போது அனுபவித்து வருகிறது.

**காலநிலை மாற்ற கணிப்பு என்ன? சொல்லுகிறது?**

இந்த ஆண்டிற்கான எல்-நினோ நிகழ்வு ஆண்டின் இறுதியில் உச்சமடைந்து, நவீன காலத்தில் பார்க்கப்படாத ஒரு புதிய தீவிரத்தை எட்டும். ஆரம்பத்தில் 2026 ஆம் ஆண்டே மிக அதிகமான வெப்ப ஆண்டாக எதிர்பார்க்கப்பட்ட நிலையில், தற்போதைய தரவுகளின்படி, 2026ஆம் ஆண்டு மட்டுமல்லாமல், வருகிற 2027ஆம் ஆண்டும் அதிக வெப்பமான ஆண்டாக உருவெடுக்கும் அபாயம் இருப்பதாக தெரிகிறது.

காலநிலை மாற்றம் மற்றும் எல்-நினோ ஆகிய இரண்டுமே ஒரே நேரத்தில் செயல்படுவதால், அடுத்த 6 மாதங்களில் அதிகமாக வெப்பநிலை ஏற்படும். காலநிலை மாற்றம் ஒவ்வொரு எல்-நினோ நிகழ்வையும் இன்னும் வெப்பமாக மாற்றும் என்பதை அறியலாம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# நன்னெறி வேளாண் முறைகள் பண்ணைப்பள்ளி



திருச்சி, செப்.15

அட்மா திட்டத்தில் நன்னெறி வேளாண் முறைகள் பண்ணைப்பள்ளி பூவாளூர் கிராமத்தில் வேளாண்மை உதவி இயக்குநர் சத்யபிரியா தலைமையில் நடைபெற்றது. விவசாயிகளுக்கு உயிர் உரங்கள், பசுந்தாள் உரப்பயிர்கள் விதைப்பு, சான்று பெற்ற விதைகள் பயன்படுத்துதல், மண்மாதிரி அடிப்படையில் உரம் இடுதல், நில உடமை பதிவு செய்தல், ரசாயன உரங்கள் குறைத்து தேவையான அளவு மட்டும் பயன்படுத்த அறிவுரை வழங்கினார்.

வேளாண்மை கல்வி நிறுவனம் குமுளூர் முனைவர் விஜய் பேசுகையில் (Good Agricultural Practices - GAP) வேளாண்மை நன்னெறி முறைகள் கீழ்கண்ட முறைகளில் தொழில்நுட்ப முறையில் கடைபிடித்து ஒருங்கிணைந்த முறையில் பயிர் பாதுகாப்பு, ஒட்டுண்ணி அட்டை வயலில் கட்டுதல், தென்னை காண்டாமிருக வண்டு, சிகப்புப் கூன் வண்டு இனக்கவர்ச்சி பொறி வைத்து கட்டுபடுத்தும் முறைகள், பல்வேறு பயிர்களில் இனக்கவர்ச்சி பொறி வைத்து கட்டுப்படுத்தல், சூரிய ஒளியில் இயங்கும் விளக்குபொறி மற்றும் நெல் நேரடி நெல் விதைப்பு கருவிகள் என அனைத்து கருவிகளும் பயன்படுத்துதல் பற்றி விரிவாக விளக்கி கூறப்பட்டது. நேரடி நெல் விதைப்பு செயல் விளக்கம் – நாற்றங்கால் அமைத்து நடவு செய்வதற்குப் பதிலாக, விதைகளை நேரடியாகவே முதன்மை நிலத்தில் விதைக்கும் எளிய சாகுபடி முறையாகும்.

**முக்கிய நன்மைகள் :** நாற்று பறித்தல் மற்றும் நடவுச் செலவு இல்லாததால் கூலிச்செலவு கணிசமாகக் குறைகிறது. 20–30% வரை நீர் சேமிக்கப்படுகிறது. பயிர் 7–10 நாட்கள் முன்னதாகவே அறுவடைக்கு வருகிறது.

**விதை அளவு & நேர்த்தி :** ஏக்கருக்கு 20-25 கிலோ விதை தேவை. 1 கிலோ விதைக்கு 2 கிராம் கார்பன்டாசிம் அல்லது 10 கிராம் ட்ரைக்கோடெர்மா விரிடி கொண்டு விதை நேர்த்தி செய்ய வேண்டும்.

விதைக்கும் முறை : ஈர நிலத்தில் 'டிரம் சீடர்' (Drum Seeder) மூலமும், உலர் நிலத்தில் 'சீட் டிரில்' (Seed Drill) கருவி மூலமும் வரிசையாக விதைக்கலாம்.

**களை மேலாண்மை :** விதைத்த 2-4 நாட்களில் 'பிரிட்டிலா குளோர் + சாஃபனர்' மற்றும் 15-20 நாட்களில் 'பிஸ்பைரிபாக் சோடியம்' களைக்கொல்லி தெளிப்பது அவசியம்.

**நீர் நிர்வாகம் :** விதைத்த முதல் 10 நாட்களுக்கு நிலத்தில் தண்ணீர் தேங்காமல் ஈரப்பதம் மட்டும் பராமரிக்க வேண்டும். செயல் விளக்கமாக செய்தும் காண்பிக்கப்பட்டது. இப்பண்ணைபள்ளிக்கான ஏற்பாட்டினை அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் சபரிச்செல்வன் பேசுகையில் அட்மா திட்டத்தில் பயிற்சி, கண்டுணர்வு சுற்றுலா, செயல் விளக்கம் பெற அலுவலகம் வந்து முன்னுரிமை பதிவேட்டில் பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம் என கூறினார். உதவி தொழில் நுட்ப மேலாளர் கார்த்திக் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு நன்றி கூறினார்.


# இப்கோ நானோ விழிப்புணர்வு முகாம்



சென்னை, செப்.15

சேலம், தஞ்சாவூர் மற்றும் திருச்சி ஆகிய மாவட்டங்களில் இப்கோ நானோ விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், இப்கோ கள அதிகாரியால், இப்கோ நானோ திரவ உரங்கள் நானோ யூரியா, நானோ டி.ஏ.பி., சாகரிகா, நீரில் கரையும் உரங்கள் மற்றும் உயிர் உரங்கள் ஆகியவற்றின் பயன்பாட்டு முறைகள் மற்றும் நன்மைகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது. தொடர்ந்து, இப்கோ நானோ டி.ஏ.பி. கொண்டு விதை நேர்த்தி செய்யும் முறைகள், வேர் வளர்ச்சியை மேம்படுத்துவதன் பயன்கள் மற்றும் பல்வேறு பயிர்களுக்கு ஏற்ற நானோ உரங்களைப் பயன்படுத்தும் முறைகள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது. மேலும், சங்கட ஹரண் பீமா யோஜனா திட்டம் மற்றும் அதன் பயன்கள் குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# தென்னையில் காண்டாமிருக வண்டு தாக்குதலை கட்டுப்படுத்த பெரோமோன் பொறி அமைக்கும் முறை மாணவர்கள் செயல்விளக்கம்



தென்காசி, செப்.15

தென்காசி மாவட்டம், வாசுதேவநல்லூர் பகுதியில், கிராம தங்கல் திட்டத்தின் கீழ் கலசலிங்கம் பல்கலைக்கழக மாணவர்கள் தென்னைப் பயிரில் காண்டாமிருக வண்டு தாக்குதலைக் கட்டுப்படுத்தும் வகையில் விவசாயிகளுக்கான செயல்விளக்க நிகழ்ச்சியை நடத்தினர். இதில் காண்டாமிருக வண்டு தாக்குதலால் தென்னை மரங்களில் ஏற்படும் அறிகுறிகள், பாதிப்புகள் மற்றும் அவற்றைக் கட்டுப்படுத்தும் மேலாண்மை முறைகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது.

காண்டாமிருக வண்டு தென்னையின் இளம் குருத்துப் பகுதிகளைத் தாக்குவதால், விரிந்து வரும் இலைகளில் முக்கோண அல்லது வைரவடிவ வெட்டுக் குறிகள் தோன்றுதல், குருத்துப் பகுதியில் துளைகள் ஏற்படுதல் மற்றும் கடிக்கப்பட்ட நார் வெளியே காணப்படுதல் போன்ற அறிகுறிகள் தென்படும் என மாணவர்கள் எடுத்துரைத்தனர். தொடர்ந்து, காண்டாமிருக வண்டுகளைக் கவர்ந்து பிடிக்கப் பயன்படும் பெரோமோன் பொறி அமைக்கும் முறையை மாணவர்கள் நேரடியாகச் செயல் விளக்கமாக செய்து காட்டினர். தென்னை மரத்தில் பொறியை முறையாகப் பொருத்துதல், பெரோமோன் கவர்ச்சிப் பொருளைச் சரியான முறையில் அமைத்தல் மற்றும் பொறியைப் பயன்படுத்தும் விதம் குறித்து விவசாயிகளுக்கு விளக்கினர்.

மேலும், பெரோமோன் பொறியைப் பயன்படுத்துவதன் மூலம் காண்டாமிருக வண்டுகளின் எண்ணிக்கையைக் குறைத்து, தென்னை மரங்களில் ஏற்படும் தாக்குதலைக் கட்டுப்படுத்த முடியும் என்றும், பொறியை முறையாகப் பயன்படுத்தி பராமரிப்பதன் மூலம் அதன் செயல்திறனை மேம்படுத்தலாம் என்றும்மாணவர்கள் எடுத்துரைத்தனர். நிகழ்ச்சியின் போது, காண்டாமிருக வண்டு தாக்குதலின் அறிகுறிகளை அடையாளம் காணுதல், தென்னை மரத்தில் பெரோமோன் பொறியை அமைத்தல், அதன் பயன்பாடு மற்றும் நன்மைகள் குறித்து விவசாயிகளுக்கு மாணவர்கள் தெளிவாக விளக்கினர்.

# அதிக மகசூல் பெற வரிசை விதைப்பு செய்வீர்!

இராமநாதபுரம், செப்.15

'வரிசை விதைப்பு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி சான்று பெற்ற விதைகளை விதைப்பதன் மூலம் 10 முதல் 20 சதவீதம் கூடுதல் மகசூல் பெறலாம்' என விதைப்பரிசோதனை அலுவலர் சிவகாமி தெரிவித்துள்ளார்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் கமுதி, கடலாடி, முதுகுளத்தூர், பரமக்குடி, சத்திரக்குடி, நயினார்கோவில், இராமநாதபுரம், திருப்புல்லாணி, ஆர்.எஸ்.மங்களம், திருவாடானை மற்றும் மண்டபம் வட்டாரங்களில் 80% சாகுபடி பரப்பில் நெல் மானாவாரி பயிராக நேரடி விதைப்பு செய்கின்றனர். மானாவாரி சாகுபடிக்கு உகந்த குறுகிய மற்றும் மத்திய கால சான்று பெற்ற விதைகளை தேர்வு செய்து விதைக்கும் கருவிகள் கொண்டு வரிசைக்கு வரிசை 20 செ.மீ இடைவெளியும், பயிருக்குபயிர் 10 செ.மீ இடைவெளியும், 3 முதல் 5 செ.மீ ஆழத்தில் ஏக்கருக்கு 15 கிலோ விதை விதைப்பதன் மூலம் சீரான இடைவெளில் பயிர்களின் எண்ணிக்கை பராமரிக்கலாம்.

விதைக்கும் கருவிகள் மூலம் விதைப்பதால் ஏக்கருக்கு 35 கிலோ விதைக்கு பதிலாக 15 கிலோ விதையே போதுமானது. இதனால் விதை நெல்லிற்கான செலவை குறைக்கலாம். மேலும் பயிர்கள் காற்றோட்டத்துடன் வளர்வதால் பூச்சி மற்றும் நோய் தாக்குதலும் குறைவு என்பதால் பயிர் பாதுகாப்பு செலவும் கணிசமாக குறைகிறது. ஆகவே விவசாயிகள் அனைவரும் வரிசை விதைப்பு தொழில் நுட்பத்தை பயன்படுத்தி நெல் சாகுபடி செய்து அதிக மகசூல் மற்றும் இலாபம் பெறுமாறு விதைப் பரிசோதனை அலுவலர் சிவகாமி மற்றும் வேளாண்மை அலுவலர்கள் முருகேஸ்வரி மற்றும் வீரபாண்டியன் ஆகியோர் கேட்டுக் கொண்டனர்.



# எண்ணெய் வித்துப் பயிர்களின் எதிர்காலம்

## தன்னிறைவு இந்தியாவை நோக்கி

## அறிவியல் வேளாண்மையின் புதிய பயணம்

‘உணவுத் தன்னிறைவைப் போலவே, சமையல் எண்ணெய் தன்னிறைவும் ஒரு நாட்டின் பொருளாதார பாதுகாப்பின் முக்கிய அடையாளமாகும்.‘



இன்று இந்தியா உலகின் மிகப்பெரிய உணவு எண்ணெய் நுகர்வோர் நாடுகளில் ஒன்றாக இருந்தாலும், தனது தேவையின் பெரும்பகுதியை இறக்குமதி மூலம் பூர்த்தி செய்து வருகிறது. இதனால் ஒவ்வொரு ஆண்டும் மிகப்பெரிய அளவில் அந்நியச் செலாவணி செலவிடப்படுகிறது. உலக சந்தையில் விலை ஏற்ற இறக்கம் ஏற்பட்டாலோ அல்லது சர்வதேச வர்த்தகத்தில் இடையூறு ஏற்பட்டாலோ, அதன் தாக்கம் நேரடியாக இந்திய நுகர்வோரையும் விவசாயிகளையும் பாதிக்கிறது.

இந்த சூழலில், கடலை, எள், சூரியகாந்தி, சோயாபீன், கடுகு, ஆமணக்கு, சாஃப்ளவர், நிலக்கடலை மற்றும் எண்ணெய்ப் பனை போன்ற எண்ணெய் வித்துப் பயிர்களின் உற்பத்தியை அதிகரிப்பது காலத்தின் கட்டாயமாகியுள்ளது. காலநிலை மாற்றம், குறைந்த நிலப்பரப்பு, நீர்ப்பற்றாக்குறை மற்றும் தொழிலாளர் பற்றாக்குறை போன்ற சவால்களை சமாளிக்கும் வகையில், நவீன தொழில் நுட்பங்களுடன் எண்ணெய் வித்துப் பயிர்களை மேம்படுத்த வேண்டிய அவசியம் உருவாகியுள்ளது.

**எண்ணெய் வித்துப் பயிர்கள் என்றால் என்ன?**

எண்ணெய் எடுக்கக்கூடிய விதைகளைக் கொடுக்கும் பயிர்கள் எண்ணெய் வித்துப் பயிர்கள் எனப்படுகின்றன.

**இந்தியாவில் முக்கியமாக பயிரிடப்படும் எண்ணெய் வித்துப் பயிர்கள் :** நிலக்கடலை, எள், சூரியகாந்தி, சோயாபீன், கடுகு, ஆமணக்கு, சாஃப்ளவர், நைஜர், எண்ணெய்ப் பனை

தமிழ்நாட்டில் நிலக்கடலை, எள், சூரியகாந்தி மற்றும் ஆமணக்கு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன.

**இந்தியாவின் தற்போதைய நிலை**

இந்தியா உலகின் முன்னணி எண்ணெய் வித்து உற்பத்தி நாடுகளில் ஒன்றாக இருந்தாலும், உள்நாட்டு உற்பத்தி மற்றும் நுகர்வு இடையே இன்னும் பெரிய இடைவெளி உள்ளது.

**இதற்கு முக்கிய காரணங்கள்**

குறைந்த மகசூல், மழையைச் சார்ந்த சாகுபடி, தரமான விதைகள் குறைவு, பூச்சி மற்றும் நோய் தாக்குதல், காலநிலை மாற்றம், விவசாய நிலப்பரப்பு குறைதல் போன்ற இந்த காரணங்களால் உணவு எண்ணெய் இறக்குமதியை அதிகமாக நம்ப வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

**எண்ணெய் வித்துப் பயிர்களின் முக்கியத்துவம்**

1. உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து

எண்ணெய் மனித உடலுக்கு தேவையான முக்கிய சக்தி ஆதாரமாகும்.

**உணவு எண்ணெய்கள்**

கொழுப்பில் கரையும் வைட்டமின்களை உறிஞ்ச உதவுகின்றன. உடலுக்கு தேவையான அத்தியாவசிய கொழுப்பு அமிலங்களை வழங்குகின்றன. உடல் வளர்ச்சி மற்றும் நோய் எதிர்ப்பு சக்திக்கு உதவுகின்றன.

**2. விவசாயிகளின் வருமானம்**

எண்ணெய் வித்துப் பயிர்கள் பல பகுதிகளில் முக்கிய பணப்பயிர்களாக விளங்குகின்றன.

**இவை :** குறைந்த காலத்தில் வருமானம் தருகின்றன. பயிர் சுழற்சியில் முக்கிய இடம் பெறுகின்றன. மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்க உதவுகின்றன.

**3. தொழில்துறை பயன்பாடு**

**எண்ணெய் வித்துப் பயிர்களிலிருந்து பெறப்படும் எண்ணெய்கள் :** உணவுப் பொருட்கள், அழகுசாதனப் பொருட்கள், மருந்துகள், பயோடீசல், சோப்பு, வண்ணத் தொழில், போன்ற பல துறைகளில் பயன்படுத்தப்படுகின்றன.

**எதிர்கால சவால்கள்**

**காலநிலை மாற்றம்**

அதிக வெப்பநிலை, வறட்சி மற்றும் ஒழுங்கற்ற மழைப்பொழிவு ஆகியவை எண்ணெய் வித்துப் பயிர்களின் மகசூலை பாதிக்கின்றன.

**நீர்ப்பற்றாக்குறை**

பல எண்ணெய் வித்துப் பயிர்கள் மானாவாரி நிலங்களில் சாகுபடி செய்யப்படுவதால், மழையை அதிகம் சார்ந்துள்ளன.

**பூச்சி மற்றும் நோய்கள்**

இலைப்புள்ளி, தண்டு அழுகல், வைரஸ் நோய்கள் மற்றும் பல்வேறு பூச்சிகள் மகசூலைக் குறைக்கின்றன.

**தொழிலாளர் பற்றாக்குறை**

கிராமப்புறங்களில் தொழிலாளர்கள் குறைவதால் இயந்திரமய மாக்கலின் அவசியம் அதிகரித்துள்ளது.

**தாவர இனப்பெருக்கத்தின் பங்கு**

எண்ணெய் வித்துப் பயிர்களின் எதிர்காலத்தை நிர்ணயிப்பதில் தாவர இனப்பெருக்கம் மிக முக்கிய பங்கு வகிக்கிறது.

ஆராய்ச்சியின் முக்கிய நோக்கங்கள் :

**1. அதிக மகசூல் தரும் ரகங்கள்**

ஒரே நிலப்பரப்பில் அதிக உற்பத்தி பெற புதிய ரகங்கள் உருவாக்கப்படுகின்றன.

**2. அதிக எண்ணெய் சத்து**

எண்ணெய் சதவீதத்தை உயர்த்தும் மரபணுக்களைப் பயன் படுத்தி மேம்பட்ட ரகங்கள் உருவாக்கப்படுகின்றன.

**3. வறட்சி மற்றும் வெப்பத் தாங்கும் ரகங்கள்**

காலநிலை மாற்றத்தை சமாளிக்கும் வகையில் புதிய ரகங்கள் உருவாக்கப்படுகின்றன.

**4. நோய் மற்றும் பூச்சி எதிர்ப்பு**

இயற்கையான எதிர்ப்புத் திறன் கொண்ட ரகங்கள் உருவாக்கப் படுவதால் இரசாயனப் பயன்பாடு குறைகிறது

**5. குறுகிய கால ரகங்கள்**

குறைந்த காலத்தில் அறுவடைக்கு வரும் ரகங்கள் பயிர் சுழற்சியை மேம்படுத்துகின்றன.

**நவீன தொழில்நுட்பங்கள்**

எதிர்கால எண்ணெய் வித்து மேம்பாட்டில் பல நவீன தொழில்நுட்பங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

மரபணு அடையாளத் தேர்வு (Marker-Assisted Selection), விரும்பத்தக்க பண்புகளை விரைவாகத் தேர்வு செய்ய உதவுகிறது.

**ஜீனோமிக் தேர்வு (Genomic Selection)**

மகசூல் மற்றும் எண்ணெய் தரத்தை முன்கூட்டியே கணிக்க உதவுகிறது.

**CRISPR மரபணு திருத்தம்**

எண்ணெய் தரம், நோய் எதிர்ப்பு மற்றும் சுற்றுச்சூழல் தாங்குதிறனை மேம்படுத்த உதவுகிறது.

**வேக இனப்பெருக்கம் (Speed Breeding)**

குறைந்த காலத்தில் புதிய ரகங்களை உருவாக்கும் வாய்ப்பை அதிகரிக்கிறது.

குறைந்த காலத்தில் புதிய ரகங்களை உருவாக்கும் வாய்ப்பை அதிகரிக்கிறது.

**துல்லிய வேளாண்மை**

எண்ணெய் வித்துப் பயிர்களில், ட்ரோன்கள், மண் ஈரப்பத உணரிகள், ,செயற்கை நுண்ணறிவு, றூஊணறீ, ஹூலிவீ, போன்ற தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படுவதால் நீர் சேமிக்கப்படுகிறது. உரச் செலவு குறைகிறது. மகசூல் அதிகரிக்கிறது.

**மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்கள்**

எண்ணெய் வித்துப் பயிர்களின் மதிப்பை உயர்த்த, குளிர் அழுத்த எண்ணெய் (Cold Pressed Oil), இயற்கை எண்ணெய்கள், உயர் ஒலிக் (High Oleic) எண்ணெய்கள், ஆரோக்கிய உணவுப் பொருட்கள், புரதம் நிறைந்த எண்ணெய் பிண்ணாக்கு போன்ற தயாரிப்புகளுக்கு உலகளவில் அதிக தேவை உருவாகியுள்ளது.

**தமிழ்நாட்டிற்கான வாய்ப்புகள்**

தமிழ்நாட்டில், மானாவாரி நிலங்கள், வறண்ட பகுதிகள், பயிர் சுழற்சி முறைகள் ஆகியவற்றில் எண்ணெய் வித்துப் பயிர்களை விரிவுபடுத்த நல்ல வாய்ப்புகள் உள்ளன.

மேலும், தரமான விதை உற்பத்தி, மதிப்புக்கூட்டப்பட்ட தயாரிப்புகள், விவசாயிகள் உற்பத்தியாளர் நிறுவனங்கள் (FPO), எண்ணெய் சுத்திகரிப்பு மற்றும் பதப்படுத்தும் தொழில்கள் ஆகியவற்றை ஊக்குவிப்பதன் மூலம் விவசாயிகளின் வருமானத்தை உயர்த்த முடியும்.



**அரசின் முயற்சிகள்**

**இந்திய அரசு மற்றும் மாநில அரசுகள் :**

தரமான விதைகள் வழங்குதல், குறைந்தபட்ச ஆதரவு விலை (ஙிறீஷிணி), எண்ணெய் வித்து மேம்பாட்டு திட்டங்கள், இயந்திரமயமாக்கல், பாசன வசதிகள், விவசாயிகள் பயிற்சி ஆகியவற்றின் மூலம் உற்பத்தியை அதிகரிக்க முயற்சி செய்து வருகின்றன.

**எதிர்காலப் பாதை**

**எண்ணெய் வித்துப் பயிர்களின் எதிர்காலம் பின்வரும் அம்சங்களில் அமையும்**

அதிக எண்ணெய் சத்து கொண்ட ரகங்கள், காலநிலை மாற்றத்தைத் தாங்கும் வகைகள், இயந்திரமயமாக்கலுக்கு ஏற்ற ரகங்கள், செயற்கை நுண்ணறிவு சார்ந்த சாகுபடி, மதிப்புக் கூட்டப்பட்ட தயாரிப்புகள், ஏற்றுமதி தரமான உற்பத்தி, விவசாயி தொழில்முனைவோர் இணைப்பு.

**முடிவுரை**

எண்ணெய் வித்துப் பயிர்கள் என்பது சமையல் எண்ணெய்க்கான மூலப்பொருட்கள் மட்டுமல்ல; அவை உணவுப் பாதுகாப்பு, ஊட்டச்சத்து, விவசாயிகளின் வருமானம், தொழில்துறை வளர்ச்சி மற்றும் நாட்டின் பொருளாதார தன்னிறைவு ஆகியவற்றின் முக்கிய அடித்தளமாகும்.

எதிர்காலத்தில் தாவர இனப்பெருக்கம், உயிரித் தொழில்நுட்பம், துல்லிய வேளாண்மை, செயற்கை நுண்ணறிவு மற்றும் மதிப்புக்கூட்டப்பட்ட தயாரிப்புகள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து செயல்படுத்தினால், இந்தியா உணவு எண்ணெய் உற்பத்தியில் தன்னிறைவு அடைவதோடு மட்டுமல்லாமல், உலகளாவிய எண்ணெய் வித்து உற்பத்தியில் முன்னணி நாடாகவும் உருவெடுக்க முடியும்.

‘எண்ணெய் வித்துப் பயிர்களில் முதலீடு செய்வது, ஒரு பயிரில் முதலீடு செய்வது மட்டுமல்ல; நாட்டின் உணவுப் பாதுகாப்பு, பொருளாதார வளர்ச்சி மற்றும் விவசாயிகளின் எதிர்காலத்தில் முதலீடு செய்வதாகும்.‘

தகவல் : ***வெங்கடேஷ் ம, முதுநிலை உதவிப் பேராசிரியர் (தாவர இனப்பெருக்கம் மற்றும் மரபியல்), அபிநயா ரா, நான்காமாண்டு மாணவி, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி –621 104.***

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

**Office**
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**